தொட்டியவலசு ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.டி. கார்த்திகேயன் .,

நா.க.எண்.01/2024 நாள்.09.07.2024

பொருள்.. வீட்டுமனைப்பிரிவுகள் – நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டாரம் – தொட்டியவலசு ஊராட்சி கீரனூர் கிராம சர்வே எண். 41/6A –ல் 1.68 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை..

1) அரசாணைஎண்.79, வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித்துறைநாள் 04–05–2017
2) அரசாணைஎண்.112. வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித்(UDE 4(3) துறைநாள்–22–06–2017.
3) அரசாணை (நிலை) எண். 138 வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித்(UDE 4(3) துறைநாள்–04–06–2004.
4) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் ந.க.எண் 47 /2021நா.மா. நாள்– 21.4.21
5) தானப்பத்திர ஆவண எண்.979/2021 நாள்.18.02.2021
6) தனியரால் வழங்கப்பட்ட ரூ.100/–க்கான உறுதிமொழி பத்திரம்
7) நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் ரூ.1,92,000/– செலுத்தப்பட்ட நாள்.19.04.2021 மற்றும் ரூ.84420 நாள்.09.01.2023.
8) கூராய்வு கட்டணமாக தொட்டியவலசு ஊராட்சிக்கு செலுத்திய நாள்.09.07.2024(பல்வகை இரசீது எண்.2024–2025/8/15/24/7/6 நாள்.09.07.2024)

ஆணை

பார்வை (1) மற்றும் (2)ஸ் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் வெண்ணந்தூர் வட்டாரம் தொட்டியவலசு ஊராட்சிக்குட்பட்ட கிராம சர்வே எண் 41/6A –ல் 1.68 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைபடுத்தப்பட்டு நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு ந.க.எண் 47/2021 நா.மா. நாள்– 21.04.2021இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5 இல் காணும் தானப்பத்திரம் மூலம் இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக தொட்டியவலசு ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

(த.பி.பா)

தொட்டியவலசு கிராம ஊராட்சி மன்றத் தீர்மான எண். 9 நாள் 27.01.2021 இன்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுகொள்ளபட்டதிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது, சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கும் சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத்தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை 6 இல் கண்டுள்ளவாறு ரூ.100/ கான ஒப்புதல் பத்திரம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 7-ல் கண்டுள்ளவாறு கூராய்வு கட்டணம் 30 மனைகளுக்கு 3% Market value கட்டணம் ரூ.84420/- மற்றும் மனை உட்பிரிவிற்கு பார்வை 8-ல் கண்டுள்ளவாறு ரூ.1,51,956/-(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு மட்டும்) தொட்டிவலசு ஊராட்சி கணக்கில் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பரிவு வரைபட தொழில் நுட்ப அனுமதி ந.க.எண் 47/2021 நா.மா. நாள்– 21.04.2021ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள், மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்றம்
தொட்டியவலசு கிராம ஊராட்சி
வெண்ணந்தூர் வட்டாரம்

President,
Thottiyavalasu Panchayat.

Panchayat Secretary,
Thottiyavalasu Panchayat.

பெறுதல்

திரு.பி. மோகன்ராஜ்,
தேங்கல்பாளையம்,
இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது

2. சார்பதிவாளர் அலுவலகம், இராசிபுரம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது

3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாமக்கல் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது

4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) வெண்ணந்தூர் வட்டாரம். (தகவலுக்காக)